Arupadai Veedu Konda Thirumuruga
Thirumurugaatru Padai Dhannilae
Varum Muruga- Muruga

Aru padai

Paatudai Thalaivan Endru Unnai Vaithaen-Unnai
Paadi Thozuvadharkey Ennai Vaithaen Muruga

Aru Padai

Vaendiya Mambhazhathai Ganapathiku
Andha Velli Panithalaiar Koduthatharku
Aandiyin Kolamutru Malai Meedhu-Nee
Amarndha Pazhani Oru Padai Veedu

Aru Padai

Oru Porum Thathuvathin Sareduthu-Nalla
Om Enum Mandirathin Porul Uraithu
Thandhaiku Ubadesam Seidha Malai-Engal
Thamizh Thiru Nadu Kandha Swami Malai

Aru Padai

Devar Padai Thalaimai Poruppeduthu-Tholgal
Thinaveduthu Sooran Udal Kizhithu
Kovil Konde Amaindha Oru Veedu-Kadal
Konjum Senthoorilulla Padai Veedu

Aru Padai

Kuru Nagai Deivanai Malarodu-Undhan
Kulamagalaga Varum Ninaivodu
Thiru Manak Kolam Konda Oru Veedu- Vanna
Thiruparankundramenum Padai Veedu

Aru Padai

Devar Kurai Thavirthu  Sinam Thanindhu-Valli
Thellu Thamizh Kurathi Thanai Manandhu
Kaaval Puriyavenru Amarndha Malai
Engal Kanni Thamizharth Thiruthanigai Malai
Thanigai Malai Thiru Thanigai Malai

Aru Padai

Kallamillamal Varum Adiyavarku-Nalla
Kaatchi Thandhu Kandhan Karunai Thandhu
Valli Deivanaiyudan Amar Solai-Thanga
Mayil Vilaayadum Pazhamudhircholai- Muruga

Aru Padai

Lyrics In Tamil

அறுபடை வீடு கொண்ட திருமுருகா
திருமுருகாற்றுப்படை தனிலே
வருமுருகா -முருகா

அறுபடை

பாட்டுடைத் தலைவன் என்று உன்னை வைத்தேன்-உன்னைப்

பாடித் தொழுவதற்கே என்னை வைத்தேன் முருகா

அறுபடை

வேண்டிய மாம்பழத்தைக் கணபதிக்கு – அந்த
வெள்ளிப்பனித் தலையர் கொடுத்ததற்கு
ஆண்டியின் கோலமுற்று மலை மீது – நீ
அமர்ந்த பழனி ஒரு படைவீடு

அறுபடை

ஒரு பெரும் தத்துவத்தின் சாறெடுத்து – நல்ல
ஓம் எனும் மந்திரத்தின் பொருள் உரைத்து
தந்தைக்கு உபதேசம் செய்த மலை – எங்கள்
தமிழ்த்திருநாடு கண்ட சுவாமிமலை

அறுபடை

தேவர் படைத்தலைமை பொறுப்பெடுத்து-தோள்கள்

தினவெடுத்துச் சூரன் உடல் கிழித்து
கோவில் கொண்டே அமர்ந்த ஒருவீடு – கடல்
கொஞ்சும் செந்தூரில் உள்ள படைவீடு

அறுபடை

குறுநகை தெய்வானை மலரோடு – உந்தன்
குலமகளாக வரும் நினைவோடு
திருமணக்கோலம் கொண்ட ஒரு வீடு – வண்ண
திருப்பரங்குன்றம் என்னும் படைவீடு

அறுபடை

தேவர் குறை தவிர்த்து சினம் தணிந்து – வள்ளி
தெள்ளுத் தமிழ் குறத்தி தனை மணந்து
காவல் புரிய என்று அமர்ந்த மலை – எங்கள்
கன்னித் தமிழர் திருத் தணிகை மலை

அறுபடை

கள்ளமில்லாமல் வரும் அடியவர்க்கு – நல்ல
காட்சி தந்து கந்தன் கருணை தந்து
வள்ளி தெய்வானையுடன் அமர் சோலை- தங்க

மயில் விளையாடும் பழமுதிர் சோலை – முருகா

அறுபடை